

சிவகாசி மாநகரத்துக்கு வருகை தந்த திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்களை சிவகாசி மாநகர தி.மு.க.வின் சார்பில் மாநகரச் செயலாளர் உதயசூரியன் வரவேற்றார். உடன் தி.க. மாவட்ட தலைவர் திருப்பதி, தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் பால்ராஜ், மாவட்ட பிரதிநிதி இராஜேஸ் ஆகியோர் உடன் இருந்தனர்.

### தென்மாநில முதல்வர்கள் மாநாட்டில் – தமிழக முதல்வர்

# ‘மேகதாது அணை கட்ட விட மாட்டோம்’ என பேசுவதற்கு அஞ்சுவதா?

## சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!

நெல்லை, ஆக. 23 –

முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு தனது எக்ஸ் வலை தளத்தில் கூறியிருப்பதாவது:

சென்னை கோவளத்தில் நடைபெற்ற தென் மாநில முதல்வர்கள் மாநாட்டில் பேசிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தென் மாநிலங்களில் நிலுவையில் உள்ள நதி நீர் பிரச்சினைகளை பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க முன்வர வேண்டும் என்று கூறியிருப்பது தமிழக முதல்வரின் பலவீனத்தை பிரதிபலிக்கிறது.

அதே மாநாட்டில் பேசிய கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் ”நீர் பங்கீடு என்பது ‘நீர் ஒத்துழைப்பு என மாற வேண்டும் என்றும் மேகதாது அணை தமிழகத்திற்காக கட்டப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார். பெங்களூரு குடிநீருக்கு 5.டி.எம்.சி.தண்ணீர் தவிர மீதி அனைத்தையும் தமிழ்நாட்டுக்கு திறந்து விடுவோம் என்பதை ஒன்றிய அமைச்சர் அமித்ஷா முன்னிலை யில் உத்தர



வாதமாக அளித்துள்ளோம் என்று அவர் பேசியது அனைத்தும் வஞ்சக வார்த்தை CMsir?

தற்போது உச்சநீதிமன்றம் உத்தரவிட்டும் தமிழகத்துக்கு தண்ணீர் திறக்காத கர்நாடக முதல்வர் உள்துறை அமைச்சர் மூலம் சதி திட்டம் தீட்டி மிரட்டுவதற்கு முதல்வர் ஜோசப் விஜய் துணை போகலாம். திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட கட்சிகளும் தமிழக மக்களும் ஒருபோதும் இதை அனுமதிக்க மாட்டோம் என்பதை தெரிந்து கொள்ளுங்கள் CMsir?

மாநாட்டில் பேசிய தமிழக முதல்வர் ”மேகதாது அணை கட்ட விடமாட்டோம் என்று பேசுவதற்கு அஞ்சி நடுங்கி அவர்களின் மிரட்டலுக்கு பயந்து விவாதிக்கலாம், பேசலாம் என்ற தொனியில் பேசி இருப்பது வன்மையாக கண்டிக்கத் தக்கது!

முல்லைப் பெரியார் அணை பாதுகாப்பு பராமரிப்பு மற்றும் அணை நீர் திறப்பு உட்பட அனைத்து நிர்வாகமும் நமது மாநில கட்டுப்பாட்டில் இருந்ததை எம்.ஜி.ஆர்.அவர்கள் முதல்வரானதும் தமிழக காவல்துறையை வாபஸ் பெற்று, கேரளா காவல் துறை பாதுகாப்புக்கு மாற்றிய நாள் முதல் இன்று வரை முல்லைப் பெரியாறு அணை சார்ந்த துன்பங்களை தமிழக மக்கள் அனுபவித்து வருகிறோம்.அதன் தொடர்ச்சி தான் நேற்று முன்தினம் மாநாட்டில் பேசிய கேரளா முதல்வர், முல்லைப் பெரியார் அணைக்கு புதிய அணை கட்ட வேண்டும் என்ற சர்ச்சையை கிளப்பி யுள்ளார்.

அதேபோல் தற்போது தமிழக முதல்வர் முதல்வராகி தனது கர்நாடக நண்பர் வெங்கட் கே.நாராயணாவோடு சேர்ந்து மேகதாது அணை கட்ட துடிக்கும் கர்நாடகா அரசுக்கு துணை நின்று, தமிழக மக்களுக்கு துரோகம் செய்ய நினைக்கும் உங்களை தமிழகம் மன்னிக்காது CMsir?

கலைஞர் அவர்கள் அமைத்த ”காவிரி தீ ர்ப்பாயம் தீர்ப்பின் அடிப்படையில் உச்சநீதிமன்றம் ”காவிரி மேலாண்மை வாரியமாக தந்த தீர்ப்பை தட்டிப் பறித்து காவிரி மேலாண்மை ஆணையமாக மாற்றி தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்த காங்கிரஸ்பா.ஜ.க.வோடு தமிழகம் முதல்வரும் சேர்ந்து மேகதாது அணை கட்டிவிடலாம் என்று உங்கள் கனவு, தி.மு.க.தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இருக்கும் வரை ஒருபோதும் நடக்காது, தமிழக மக்களோடு சேர்ந்து உங்களை ஆட்சியிலிருந்து ஓட ஓட விரட்டியடிப்பார் CMsir?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### 717 டாஸ்மாக் கடைகள் மூடுவதாக் கூறிவிட்டு வருவாய் இழப்பை சமாளிக்க இடமாற்றமா?

# பொதுமக்கள் பாதுகாப்பு என கூறிவிட்டு அதிக விற்பனை கடைகளுக்கு குறி!

## த.வெ.க. அரசின் இரட்டை நிலைப்பாட்டால் சர்ச்சை!

சென்னை, ஆக. 23 -

பள்ளி, கல்லூரிகள், வழிபாட்டுத் தலங்கள், பேருந்து மற்றும் ரயில் நிலையங்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களின் அருகே செயல்பட்டு வந்த 717 டாஸ்மாக் மதுக்கடைகளை மூடிய தமிழக அரசு, தற்போது அவற்றில் அதிக விற்பனை நடைபெற்ற முக்கியமான கடைகளை வேறு இடங்களுக்கு மாற்றுவது குறித்து ஆலோசித்து வருவது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதாகக் கூறி, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் இருந்து 500 மீட்டர் தூரத்துக்குள் செயல்படும் மதுக்கடைகளை மூட முதலமைச்சர் விஜய் உத்தரவிட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதன்படி விதிகளை மீறி செயல்பட்டதாக கூறப்பட்ட 717 மதுக்கடைகள் மூடப்பட்டன. இதனால் அரசுக்கு சுமார் ரூ.11 ஆயிரம் கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஆனால், கடைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதால் அருகில் உள்ள டாஸ்மாக் கடைகளில் கூட்டம் அதிகரித்து பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுவதாக தற்போது அரசு தரப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மூடப்பட்ட 717 கடைகளில் அதிக விற்பனை நடைபெற்ற முக்கியமான கடைகளை இடமாற்றம் செய்வதே சிறந்த தீர்வு என அமைச்சர் விக்னேஷ் கூறியிருப்பது, அரசு எடுத்த நடவடிக்கையின் நோக்கம் குறித்த கேள்வியை எழுப்பியுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு, பெண்களின் பாதுகாப்பு ஆகியவற்றை காரணம் காட்டி மதுக்கடைகள் மூடப்பட்ட நிலையில், அதிக விற்பனை நடைபெறும் கடைகளை மட்டும் வேறு இடங்களில் மீண்டும் செயல்படுத்தும் முயற்சி ஏன் என்ற கேள்வியை சமூக ஆர்வலர்கள் எழுப்பியுள்ளனர்.

இதனால் மதுவிற்பனையை கட்டுப்படுத்துவதா அல்லது அரசின் வருவாயை பாதுகாப்பதா என்பதில் தமிழக அரசின் நிலைப்பாடு என்ன என்ற விவாதமும் உருவாகியுள்ளது. இதனிடையே, மது பாட்டிலுக்கு ரூ.10 கூடுதலாக வசூலிக்கும் பிரச்சினையை தடுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக தொடரும் இந்த பிரச்சினையை முழுமையாக தடுக்க முடியாமல் இருப்பது குறித்தும், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களின் அருகே மதுக்கடைகள் செயல்படக் கூடாது என அறிவித்து 717 கடைகளை மூடிய அரசு, வருவாய் இழப்பு மற்றும் அருகேயுள்ள கடைகளில் கூட்டம் அதிகரிப்பு ஆகிய காரணங்களை முன்வைத்து மீண்டும் கடைகளை இடமாற்றம் செய்யும் முடிவுக்கு செல்வது, பொதுநலனா வருவாய் நோக்கமா என்ற கேள்வியை பொதுமக்கள் மத்தியில் எழுப்பியுள்ளது. இதற்கிடையே, மூடப்பட்ட 717 டாஸ்மாக் கடைகளின் முழுமையான பட்டியலையும் நேற்று தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

### மைனாரிட்டி த.வெ.க. ஆட்சியில் நுகர்பொருள் வாணிபக் கழகக் கிட்டங்கிகளில்

# 3வது நாளாக சுமை தூக்கும் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்!

## பொது விநியோகப் பொருட்கள் விநியோகம் பாதிக்கும் அபாயம்!





தேனி, ஆக. 23 -

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே வைகை அணை சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிட்டங்கி உள்ளிட்ட மாவட்டம் முழுவதிலும் உள்ள கிட்டங்கிகளில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சுமை தூக்குவோர் மாநில பாதுகாப்பு சங்கம்’ சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று 3வது நாளாக தொழிலாளர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சங்க அங்கீகாரம், கூலி உயர்வு உள்ளிட்ட பல்வேறு நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டும், இதுவரை சங்க அங்கீகாரத்திற்கான தேர்தல் நடத்தப்படவில்லை என தொழிலாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதில் நீதிமன்ற உத்தரவுப்படி சங்க அங்கீகார தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும்.

தற்காலிகப் பணியாளர்களின் பெயர்களை வருகைப் பதிவேட்டில் சேர்க்க வேண்டும்.

சிகப்பு அட்டை வைத்துள்ள தொழிலாளர்களுக்கு, முன் தேதியிட்ட கூலி உயர்வுடன் கூடிய பச்சை அட்டை வழங்க வேண்டும்.

இக்கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டச் செயலாளர் முருகன் தலைமையில் மாவட்டம் முழுவதும் போராட்டம் தீவிரமடைந்து ள்ளது. தேனி, ஆண்டிபட்டி, உத்தமபாளையம், சில்ல மரத்துபட்டி, போடி மற்றும் பெரியகுளம் ஆகிய 6 இடங்களில் இயங்கி வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிட்டங்கிகளிலும் பணிகள் முற்றிலும் முடங்கியுள்ளன.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தின் காரணமாக ரேஷன் கடைகள், அங்கன்வாடி மையங்கள், அரசு மருத்துவமனைகள், காலை உணவுத் திட்டம், அம்மா உணவகங்கள், சிறைச்சாலைகள் மற்றும் தீயணைப்பு நிலையங்களுக்கு செல்ல வேண்டிய அத்தியாவசியப் பொது விநியோகப் பொருட்கள் தங்கு தடையின்றி செல்வதில் பெருமளவில் பாதிப்பு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. எனவே, மைனாரிட்டித வெகஅரசு உடனடியாக தலையிட்டு தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் எனப் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரி க்கை விடுத்துள்ளனர்.

# கோமாளிக்கூத்தும், தற்குறி தர்பாரும்!

வரலாற்று பெருமை மிகுந்த தமிழ்நாடு சட்டப்பேரவை தற்போது நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டு அரசின் எதிர்காலம், வளங்கள், தொழில்வளம், கல்வித்தரம், சுகாதார மேம்பாடு, மாணவர் நலம், நடுத்தர, எளிய, ஒடுக்கப்பட்ட, விளிம்பு நிலை மக்களின் நல்வாழ்வு உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் தீட்டப்படவும், சில திட்டங்கள் சேர்க்கப்படவுமான ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என அன்றாடம் பணியாற்றும் நிகழ்வுகள் நடந்தேறிய நாட்களை நாம் நன்றாகவே அறிவோம்.

ஆனால் புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட தாவெக அரசின் அமைச்சர்கள், உறுப்பினர்கள் உருப்படியான தகவல்களை பேரவைக்கு தராமல், வாய்க்கு வந்ததெல்லாம் வாக்கியம் என்பது போல் உருட்டி, பாட்டுக்கு பாட்டெடுத்துப் பாடி வருகின்றனர்.

சரித்திரப் புகழும், வரலாற்றுத் தொன்மையும் மிகுந்த தமிழ்நாடு சட்டப்பேரவை இன்று தற்குறி ஆட்சியாளர்கள் கையில் சிக்கி படாதபாடு படுகிறது.

சபை நாகரிகம், கண்ணியம் தெரியாமல், படித்து அறியாமல், உலறிக் கொட்டும் உறுப்பினர்கள், அவற்றை சரிபடுத்த உளுத்துப்போன முட்டுக் கொடுக்கும் சில அமைச்சர்கள்.

உடம்பெல்லாம் மூளை. மூளையெல்லாம் சிந்தனை என்று புகழப்பட்ட மூதறிஞர் ராஜஜி வீற்றிருந்த பேரவையில், “ தேவதாசிகளாக கோயிலுக்கு நேர்ந்து விட்டு, கோயிலுக்கு சேவை செய்வது மாபெரும் புண்ணியம் என்றால், அந்த புண்ணியத்தை இனி உங்கள் குலப்பெண்கள் பெற்றுக் கொள்ளட்டுமே, “ என சத்தியமூர்த்தி அவர்களைப் பார்த்து, வீரம் கொப்பளித்த சமூக நீதி வீராங்கனை டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி முழங்கியப் பேரவையில்,

“YOUR DAYS ARE NUMBERD” என்று முதலமைச்சர் அண்ணாவைப் பார்த்து, காங்கிரஸ் உறுப்பினர் விநாயகம் துடுக்காக வார்த்தை விடுத்தபோது விடுக்கென “MY STEPS ARE MESURED” பதில் சொன்ன சொல்லாட்சி வித்தகர் அண்ணா, அலங்கரித்த அவையில்,

“ நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்படும் தொழில் நிறுவனங்களில் ஏதேனும் ஒன்று எனது தொகுதிக்கு கிடைக்குமா?” என மாயவரம் உறுப்பினர் கிட்டப்பா எழுப்பிய கேள்விக்கு, “ கிட்டப்பா, வரும் தொழில் ஆண்டில் அது உங்கள் தொகுதிக்கு, கிட்டாதப்பா என நகைச்சுவை ததும்ப பதில் சொன்ன நாவண்மையாளர் தலைவர் கலைஞர் கோலோச்சிய பேரவையில்,

குடியரசுத் தலைவராக இருந்த சஞ்சீவ ரெட்டி அவர்களைக் கொண்டு, திறக்கப்படும் பெருந்தலைவர் காமராசர் படத்திற்கு கீழே பொருத்தமான வாசகத்தை கூறுங்கள் என்று முதலமைச்சர் எம். ஜி. ஆர் எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களிடம் கேட்க, “உழைப்பே, உயர்வு தரும்! “ என தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிக்கொடுத்த வாசகத்தோடு இன்னும் அந்தப் படம் ஆரோக்கிய அரசியலுக்கு, சாட்சியாக நிற்கும் பேரவையில்,

அதே பெருந்தலைவர் காமராசர் மறைவின் போது, தமிழ்நாடு முதலமைச்சராக வீற்றிருந்த தலைவர் கலைஞர் அவர்கள் காமராசர் இறுதி மரியாதை நிகழ்விற்கு கொட்டும் மழையில் ஆற்றிய சேவைக்கு பேரவையில் நன்றி கூறிய ராஜாராம் நாயுடு அவர்கள், “ காமராசருக்கு உடன் பிறந்தசகோதரர்இருந்திருந்தாலும்முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பணியைப் செய்திருக்க மாட்டார்கள். அரசியல் சூழ்நிலை எப்படி வேண்டுமானாலும் மாறலாம். ஆனால் முதலமைச்சரின் இந்த செயலை எங்கும், என்றும் நன்றியுடன் சொல்வேன்’ என ஆற்றிய உரை இன்றும் தனது நினைவுப் பதிவேட்டில் சுமந்திருக்கும் பேரவையில்,

முதலமைச்சர் பேரவையில் உள்ளே நுழைந்தால், எதிர்கட்சித் தலைவர் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும். என பேரவை விதியறியாமல் விளாசித்தள்ளும் பேச்சுக்கள்.

நல்லவேளை முதலமைச்சர் வரும் போது, ராஜாதி ராஜ, ராஜகுல திலக, ராஜ கம்பீர, ராஜ மார்த்தாண்ட, பராக்! பராக்! என்று சொல்லாமல் விட்டாரே என்று சிரிப்பாய் சிரிக்கிறது தமிழ்நாடு!

ஒரு அமைச்சர் சூரியனுக்கே வேர்கிறது எனும் புது அறிவியல் விதியை முதலமைச்சரைப் புகழ்வதாக துதி பாடினார். அதற்கு முன்னாள் முதலமைச்சராக இருந்த நமது ஓ. பி. பன்னீர்செல்வம் அவர்கள், “ இதுவரை எவரும் நெருங்க முடியாத இடத்தில் தான் சூரியன் இருக்கிறார்” என்று வைத்த நச்சென்ற பதிலில் நமது திராவிடப் பேரரசர் தளபதியவர்கள் சிரிக்கிறார்.

கசாப்புக்கடைக்கு கருணைமிகு வள்ளலார் பெயர் என்பது போல், அடிதடிக்கு பேர்போன, வழக்குப் பதிவான உருட்டுக்கட்டை புகழ் அமைச்சரொருவர் எகிறியடித்து, ஏகடியம் பேசுவதற்கு ஏசுநாதரைத் துணைக்கழைத்து, அன்பு மொழி, சமாதான மொழி என்கிறார் இவரால் அடிபட்டவர்கள் ஆழப்பதிந்த வடுக்களை இன்னும் தடவியபடி தாரை தாரையாய் வடிக்கின்றனர் கண்ணீர்.

அங்கே 59. இங்கே நாங்கள் எழுந்தால், என்னாவது! என மிரட்டும் தொணியில் பேசி, பேரவைத் தலைவரின் கண்டனத்திற்குள்ளானார். அந்த 7 அடி வளர்ந்த….. அமைச்சர்.

சட்டமன்றத்தை பாட்டு மன்றமாக்கிய ஆளுங்கட்சி பாடும் பறவைகள், “ ஆளும் வளரனும்! அறிவும் வளரனும்! அதுதாண்டா வளர்ச்சி! “ எனும் பட்டுக்கோட்டையாரின் பாடலைப் பாடி நினைவூட்டக் கூடாதா?

உலகத் தமிழினத்தின் ஒப்பற்றத் தலைவர் கலைஞரின் பெயரை சொல்கிறார் ஒரு உறுப்பினர். அதற்கு பழைய சட்டமன்ற நடவடிக்கைகளில், எம். ஜி. ஆர் ஆட்சியில் இதே போன்று ஒரு உறுப்பினர் தலைவர் கலைஞர் அவர்களின் பெயரைச் சொன்ன போது, இடைமறித்த எம். ஜி. ஆர், “ கலைஞர் “ என்று சொல்லுங்கள். அவர் எனக்கும் தலைவராக இருந்தவர் “ என்று சாட்டசிப் பகர்ந்தார் அன்று அவையிலிருந்த நமது சாத்தூர் ராமச்சந்திரன் அவர்கள்.

பேசத் தெரியாமல் பேசுவதையெல்லாம் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசியப்பின் அவை, அவைக்குறிப்பிலிருந்து நீக்கம் என்பது பேரவைத் தலைவரின் வாடிக்கையான செயலாகிப் போனது.

பேரவைத் தலைவர் JCD பிரபாகரன் JCB எந்திரம் போல் ஆளுங்கட்சி உறுப்பினர்களின் பட்டறிவை தூர் வார நினைத்து தோற்றுத்தான் போகிறார்.

என்ன செய்வது பேரவைத்தலைவரின் Mindvoice சொல்கிறதாம், ஆளுங்கட்சி உறுப்பினர்களைப் பார்த்து, “ பிதாவே இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே! ( பைபிள் ). என்று.

அமைச்சர் புஸ்சி ஆனந்த் சொல்கிறார் அச்சம் என்பது முதலமைச்சரின் அகராதியில் இல்லையாம். அதுதான் கரூரில் 41 பேர் இறந்த போது எடுத்த ஓட்டத்தில் தெரிந்ததே முதலமைச்சரின் நெஞ்சுரம்.

எந்த கேள்விக்கும் முதலமைச்சர் பதில் சொல்ல மாட்டாரா? என நேருக்கு நேராக நெத்தியடிக் கேள்வி.

ஆதாரமற்றக் குற்றச்சாட்டுகளை அடுக்காதீர்கள் என மிடுக்காக எதிர்கட்சித் தலைவர் வைத்த வாதத்திற்கு, விழி மூடி யோசித்தும் விடை தெரியவில்லையாம் ஆளுங்கட்சி அமைச்சர்களுக்கு.

**வழக்கறிஞர்**
**வெ.அன்புவாணன்**
*கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்*



மொத்தத்தில் முதலமைச்சர் சுடச்சுட வடையைத்தான் சுடுகிறார் என ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கிறார் ஆளுங்கட்சி அம்மணி ஒருவர்.

பெரும் நிதிப்பற்றாக்குறை! எங்கே தேடுவேன் பணத்தை! எங்கே தேடுவேன்? கஜானா காலி என்ற முதலமைச்சர், விவசாய கடன்களை முழுவதும் தள்ளுபடி செய்யாமல், இழப்பீடுகளை தராமல், மாணவர்களின் கல்விக் கடன்களுக்கு பதில் சொல்லாமல், தேர்தல் அறிக்கையில் சொன்ன மகளிர் உரிமைத் தொகை ரூபாய் 2500 தராமல், வருடத்திற்கு ஆறு சிலிண்டர் வரவே, வராதா? என தாய்மார்களின் ஏக்கத்தை போக்காமல், வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு மாதம் 4000 உதவித்தொகை வழங்காமல், இன்னும் எத்தனை எத்தனையோ நிதி சார்ந்த திட்டங்களை செயல்படுத்தாமல், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இன்னோவா கார் வழங்குவாராம். என்னே இவரின் நிதிச்சுமையைக் கையாளும் திறன்?

நாங்கள் அரசியல்வாதிகளே அல்ல என்கிறார். அமைச்சர் புஸ்சி. ( புதுவை பக்கமும் புஸ்சியை இப்படித்தான் சொல்கிறார்களாம் )

தேர்தல் ஆணையத்தில் நீங்கள் உங்கள் கட்சியை வேறெப்படி பதிவு செய்தீர்கள் என்று தரமான கேள்வி கேட்டார் நமது உறுப்பினர் கோவி. செழியன் அவர்கள்.

இங்கே கவன ஈர்ப்பு தீர்மானத்தை பற்றி சிந்திக்காமல் முதலமைச்சரின் கவனைத்தை ஈர்க்கும் துதிபாடல்களே மேலோங்கி நிற்கிறது.

இப்படி நாளொரு மேனி, பொழுதொரு நடிப்பு என்பது போல், கோமாளிக் கூத்து நடைபெறும் தற்குறி தர்பாராகத்தான் இந்நாளைய பேரவை நடைபெறுகிறது.

வாக்களித்த மக்கள் வசைபாட தொடங்கியுள்ளனர்.

இவர்கள் இசைபாடும் செயலைத் தவிர்த்து, இனியதை நாட்டுக்குச் செய்ய, கடிவாளமாய் கருத்துக்கள் பகன்று, திரமான வாதங்கள் வைத்து, உரமான கேள்விக் கணை தொடுக்கிறார் எதிர்கட்சித் தலைவர் உதயநிதி அவர்கள்.

காலம் பதில் சொல்லும். காத்திருந்து விடை பெறுவோம்!